**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 312/2023**

**Dated: 07.07.2026**
**Deposition of Witness for PW - 3**

| Name | **திரு.ரமேஷ்** |
|---|---|
| Father Name | |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed by Thiru.Vinothkumar, Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் போலீசார் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**(சாட்சி காணொலி காட்சி மூலம் சாட்சியமளிக்கப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம் கொங்கனாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 11.05.2023-ம் தேதி திருச்சி போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் 22.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் தீரன்நகர் பஸ் ஸ்டாப் அருகில் ஒருவர் கஞ்சா விற்றுக் கொண்டிருப்பதாக அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அதனை என்னிடம் எழுத்து மூலமாக தெரிவித்தும் என்னிடம் கூறி சோதனை செய்ய அனுமதி

கோரினார். நான் முன் தகவலை பரிசீலித்து சோதனைக்கு அனுமதி வழங்கினேன். அதன்அடிப்படையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் போலீஸ் பார்ட்டி சகிதம் சோதனை மேற்கொண்டும் இவ்வழக்கின் எதிரியை பிடித்தும் அவரிடமிருந்து தடய சொத்தினையும் கைப்பற்றியும் காவல் நிலைய குற்ற எண்.6/2023 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்தும் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் வழக்கு சொத்தினை படிவம் எண்.95ன்மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தும் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக என் வசம் ஒப்படைத்தார். அதற்கான **படிவம் 95 அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறப்பு சார்பு ஆய்வாளர் சமர்ப்பித்த NDPS சட்ட பிரிவு 57ன்படியான விரிவான அறிக்கையை பரிசீலித்தேன். பின்னர் வழக்கு கோப்பினை பரிசீலித்தும் சாட்சிகள் சிறப்பு சார்பு ஆய்வாளர் விஸ்வநாதன், சிறப்பு சார்பு ஆய்வாளர் காளிமுத்து, மு.நி.கா.செல்வராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கு சொத்தினை பகுப்பாய்வுக்கு திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்க த.கா.சாமிநாதன் அவர்களை நியமித்தேன். அவர் நீதிமன்றத்தின் மூலம் தடய சொத்தினை பகுப்பாய்வுக்கென பெற்றும் திருச்சி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தும் பின்னர் பகுப்பாய்வு முடிந்த பிறகு பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான **பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தினை NDPS சட்ட பிரிவு 52(A)-ன் பிரகாரம் திருச்சி நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களிடம் Inventory எடுக்க என்னால் ஒப்படைக்கப்பட்டது. நீதித்துறை நடுவர் எண்.3 தடய சொத்தினை புகைப்படம் எடுத்தும் Inventory எடுத்து சான்று

வழங்கியுள்ளார்.அதற்கான **Annexure I அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான **Annexure II அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தடய சொத்தினை திருச்சி நீதித்துறை நடுவர் எண்.3 அவர்கள் முன்பாக எடுக்கப்பட்ட **புகைப்படங்கள் எண்ணிக்கை 5 அதசாஆ.10 வரிசையாக** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் எதிரியிடமிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் விஸ்வநாதன் கைப்பற்றிய தடய பொருள் கஞ்சா என்பது தெரிய வந்தது தடய அறிவியல் அலுவலர் திருமதி. கலைவாணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு சம்பவம் உண்மை என புலன் விசாரணையில் துலங்கியதால் எதிரி மீது 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி 05.07.2023 அன்று இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். தடய சொத்தினை இந்நீதிமன்றத்தின் மூலம் உத்தரவு பெற்று Drugs Disposal Committee மூலம் NDPS சட்டபிரிவு 52(A)- ன் பிரகாரம் அழிக்க 20.01.2025-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் அழிக்கப்பட்டுள்ளது. அதற்கான **நீதிமன்ற அழிப்பு உத்தரவு அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிக்கு வழங்கப்பட்ட **கைது குறிப்பாணை அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பிறகு தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ இடமான திருச்சியிலிருந்து தீரன்நகர் ஒரு பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். பிராட்டியூரிலிருந்து தீரன்நகர் வருவதற்கு ஒரு பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையின்படி எந்த பேருந்து நிலையத்தில் வைத்து எதிரியை கைது

செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்களில் பொது நபர்கள் சாட்சிகளை விசாரித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்களின்படி எழுத்து மூலமாக கடிதம் கொடுத்து சம்பவ இடத்திற்கு சென்றோம் என சாட்சிகளின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அசா.1, அசா.2 சாட்சிகளின் வாக்குமூலங்களின்படி அதிகாலை 1.30 மணியளவில் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா.1, அசா.2 சாட்சிகள் வந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அசா.1, அசா.2 சாட்சிகளை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரணை செய்தீர்கள் என்றால் 12.05.2023-ம் தேதி நிலையத்தில் வைத்து சாட்சிகளை விசாரணை செய்தேன். எத்தனை மணிக்கு விசாரணை செய்தேன் என்றால் விசாரணை செய்த மணி, நேரம் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. சாட்சிகளின் வாக்குமூலங்கள் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் அசா.1 அசா.2 சாட்சிகள் கைது செய்யவும் இல்லை அவர்களிடமிருந்து இந்த வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றும் எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்துக்களை 16 நாட்கள் காலதாமதமாக தான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். NDPS சட்டத்தில் சொல்லியுள்ளவாறு Inventory செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொது நபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

## <u>மறு விசாரணை</u>

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.